ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவகீந்திரபுரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமானுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவகீந்திரபுரம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶூரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – இருந்தண்

‡ இருந்தண் மா நிலம் ஏனம் அதாய் ⋆
வளை மருப்பினில் அகத்தொடுக்கி ⋆
கருந்தண் மா கடல் கண் துயின்றவன் இடம் ⋆
கமல நல் மலர்த்தேறல் அருந்தி ⋆
இன் இசை முரன்றெழும் அளி குலம் பொதுளி ⋆
அம் பொழில் ஊடே ⋆
செருந்தி நாண்மலர் சென்றணைந்துழிதரு ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.1** ‖

மின்னும் ஆழி அங்கை அவன் ⋆
செய்யவள் உறை தரு திரு மார்பன் ⋆
பன்னு நால் மறைப் பல பொருள் ஆகிய ⋆
பரன் இடம் வரைச் சாரல் ⋆
பின்னும் மாதவிப் பந்தலில் பெடை வரப் ⋆
பிணி அவிழ் கமலத்து ⋆
தென்ன என்று வண்டின் இசை முரல் தரு ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.2** ‖

வையம் ஏழும் உண்டு ⋆
ஆலிலை வைகிய மாயவன் ⋆
அடியவர்க்கு மெய்யன் ஆகிய தெய்வ நாயகன் இடம் ⋆
மெய் தகு வரைச் சாரல் ⋆
மொய் கொள் மாதவி சண்பகம் முயங்கிய ⋆
முல்லை அம் கொடி ஆட ⋆
செய்ய தாமரைச் செழும் பணை திகழ் தரு ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.3** ‖

மாறு கொண்டுடன்றெதிர்ந்த வல் அவுணன் தன் ⋆
மார்பகம் இரு பிளவாக் ⋆
கூறு கொண்டவன் குல மகற்கு ⋆
இன் அருள் கொடுத்தவன் இடம் ⋆
மிடைந்து சாறு கொண்ட மென் கரும்பிளம் கழை தகை ⋆
விசும்புற மணி நீழல் ⋆
சேறு கொண்ட தண் பழனம் அதெழில் திகழ் ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.4** ‖

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று ⋆
அகல் இடம் அளந்து ⋆
ஆயர் பூம் கொடிக்கின விடை பொருதவன் இடம் ⋆
பொன் மலர் திகழ் ⋆
வேங்கை கோங்கு செண்பகக் கொம்பினில் ⋆
குதி கொடு குரக்கினம் இரைத்தோடி ⋆
தேன் கலந்த தண் பலங்கனி நுகர் தரு ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.5** ‖

கூன் உலாவிய மடந்தை தன் கொடுஞ்சொலின் திறத்து ⋆
இளம் கொடியோடும் ⋆
கான் உலாவிய கரு முகில் திரு நிறத்தவன் இடம் ⋆
கவின் ஆரும் ⋆
வான் உலாவிய மதி தவழ் மால் வரை ⋆
மா மதிள் புடை சூழ ⋆
தேன் உலாவிய செழும் பொழில் தழுவிய ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.6** ‖

மின்னின் நுண் இடை மடக்கொடி காரணம் ⋆
விலங்கலின் மிசை இலங்கை மன்னன் ⋆
நீள் முடி பொடி செய்த மைந்தனதிடம் ⋆
மணி வரை நீழல் ⋆
அன்ன மா மலர் அரவிந்தத்தமளியில் ⋆
பெடையொடும் இனிதமர ⋆
செந்நெலார் கவரிக் குலை வீசு ⋆
தண் திரு அயிந்திர புரமே ‖ **3.1.7** ‖

விரை கமழ்ந்த மென் கருங்குழல் காரணம் ⋆
வில்லிறுத்து ⋆
அடல் மழைக்கு நிரை கலங்கிட வரை குடை எடுத்தவன் ⋆
நிலவிய இடம் தடம் ஆர் ⋆
வரை வளம் திகழ் மத கரி மருப்பொடு ⋆
மலை வளர் அகில் உந்தித் ⋆
திரை கொணர்ந்தணை செழு நதி வயல் புகு ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.8** ‖

வேல் கொள் கைத் தலத்தரசர் வெம் போரினில் ⋆
விசயனுக்காய் ⋆
மணித் தேர் கோல் கொள் கைத் தலத்தெந்தை பெம்மான் இடம் ⋆
குலவு தண் வரைச் சாரல் ⋆
கால் கொள் கண் கொடிக் கை எழக் ⋆
கமுகிளம் பாளைகள் கமழ் சாரல் ⋆
சேல்கள் பாய் தரு செழு நதி வயல் புகு ⋆
திரு அயிந்திர புரமே ‖ **3.1.9** ‖

‡ மூவர் ஆகிய ஒருவனை ⋆
மூ உலகுண்டுமிழ்ந்தளந்தானை ⋆
தேவர் தானவர் சென்று சென்றிறைஞ்ச ⋆
தண் திரு அயிந்திர புரத்து ⋆
மேவு சோதியை வேல் வலவன் ⋆
கலிகன்றி விரித்துரைத்த ⋆
பாவு தண் தமிழ் பத்திவை பாடிடப் ⋆
பாவங்கள் பயிலாவே ‖ **3.1.10** ‖

**திரு கேமாம்புசவல்லி சமேத தெய்வநாயகன் திருவடிகளே சரணம்**